OS.No.210/2024 (Old.No.299/2011)
Date:10.02.2026
DW6- சிங்காரவேல், த/பெ. நடேசன்.

<u>குறுக்குவிசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் 7ம் பிரதிவாதி இந்திராணியம்மாள் 8ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கு ஒரு பதிவுசெய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்ற சொல்லியுள்ளேன் அந்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி இந்திராணி எந்த தேதியில் கிரையம் கொடுத்தார் எவ்வளவு கிரையம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆறுமுகம் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் இடத்தை எந்த நாளிலும் அனுபவம் செய்யவில்லை என்றால் அனுபவம் செய்து வீடுகட்டியுள்ளார். ஆறுமுகம் வீடுகட்டியுள்ளதாக நான் எனது நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்திராணியம்மாள் ஆறுமுகத்திற்கு சொத்தை கிரையம் செய்வதற்கு அந்த சொத்தின் மீது எவ்வாறு பாத்தியம் ஏற்பட்டது என்றால் தனபாக்கியம்மாள் அவரது மகளான இந்திராணியம்மாளுக்கு பவர் கொடுத்ததின் பேரிலும் இந்திராணியம்மாள் கிரையம் கொடுப்பார் என்று சொன்னதில் பேரில் தான் இந்திராணியம்மாள் ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுத்தார். தனபாக்கியம்மாள் இந்திராணியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த பவர் ஆவணத்தை நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துபார்க்கவில்லை. அந்த பவர் பத்திரத்தில் உள்ள வாசகங்களைப் பற்றி நான் ஏதும் படிக்க கேட்டும் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி தனபாக்கியம்மாள் இந்திராணியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தில் 10 வருடம் வரை பராமரித்து விற்பணை செய்ய உரிமை கொடுத்துள்ளார் அந்த விவரமும் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தனபாக்கியம்மாள் எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தின்படி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இந்திராணியம்மாள் ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுத்தால் அந்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. இந்திராணியம்மாள் ஆறுமுகத்திற்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அந்த நகலையும் நான்

பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி தனபாக்கியம்மாள் இந்திராணியம்மாளுக்கு பவர் பத்திரம் 10 வருடம் தான் செல்லும் அதற்கு மேற்பட்டு இந்திராணியம்மாள் ஆறுமுகத்திற்கு கொடுத்த கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்தால் சக்திவேல் வாங்கிய கிரையம் செல்லாது என்பதற்காக ஆறுமுகத்தின் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தை வேண்டும் என்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் ஆறுமுகம் சக்திவேலுக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரமும் செல்லாது என்றால் சரியல்ல. சக்திவேல் அவர் அடைந்ததாக சொல்லப்படும் சொத்தை எந்த காலத்திலும் அவர் அனுபவித்து வரவில்லை என்றால் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறார். இந்திராணியம்மாள் 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கு கொடுத்த கிரையமும் செல்லாது என்றால் சரியல்ல. இந்திராணியம்மாள் 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் 50 செண்ட்டை எந்த தேதியில் கிரையம் செய்து கொடுத்தார் என தெரியுமா என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் பணம் தனபாக்கியம்மாள் மற்றும் இந்திராணியம்மாள் ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள் உடம்பு சரியில்லை என்று தனபாக்கியம்மாள் சொல்லி இந்திராணியம்மாளை அழைத்துச்சென்று கிரையம் செய்துகொள்ள சொன்னார்கள். நான் சொல்வதுபோல் எந்தவொரு தொகையையும் தனபாக்கியம்மாள் பெற்றுக்கொள்ளவில்லலை என்றால் சரியல்ல. இந்திராணியம்மாள் 9 முதல் 11 நபர்களுகளுக்கு கொடுத்த கிரையமும் செல்லாது என்றால் சரியல்ல. சர்வே எண். 53/11ல் 55 செண்ட்டு நிலத்தை 12ம் பிரதிவாதி பச்சையப்பனுக்கு நடேசக்கவுண்டர் கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளது பொய் என்றாலும் அந்த பத்திரம் செல்லாது என்றாலும் சரியல்ல. பச்சையப்பனுக்கு எந்த தேதியில் நடேசக்கவுண்டர் கிரையம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியது என்றால் தேதி எனக்கு தெரியாது ஆனால் நான் உடன் இருந்துதான் அந்த கிரையம் செய்யப்பட்டது. பச்சையப்பனிடம் இருந்து அஞ்சலை பெற்ற கிரையமும் செல்லாது என்றால் சரியல்ல. அஞ்சலை எந்த தேதியில் பச்சையப்பனிடம் இருந்து கிரையம் பெற்ற தேதி எனக்கு தெரியாது என்றால் தேதி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி எந்ததெந்த தேதிகளில் மேற்சொன்ன கிரையங்கள் எல்லாம் நடைபெற்றது என்று தேதி குறிப்புகள்

நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் நான் சொல்லவில்லையா என்றால் நான் தேதி ஏதும் சொல்லலில்லை. தாவா சொத்தைப் பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், தாவா சொத்தில் மேற்சொன்ன ஆவணங்கள் பற்றியும் அதிகாரப்பத்திரம் பற்றியும் எனக்கு தெரியாது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்